**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : வான்மதி**

**தேதி 09.07.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, நமீபியாவில், அந்நாட்டு அதிபருடன், **பிரதிநிதிகள் நிலை**யில் பேச்சு வார்த்தை நடத்தினார்.

**தேசிய கல்விக் கொள்கை** அமலாக்க நிலவரஙகள் **குறித்து,** மத்திய பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுக்கு இடையிலான, 2 நாள் மாநாடு, குஜராத் மாநிலம், **கேவாடியா**வில், நாளை தொடங்க உள்ளது.

குஜராத் மாநிலம் **வதோதரா** மாவட்டத்தில் இன்று, ஆற்றுப் பாலம் திடீரென இடிந்து, 5 வாகனங்கள் ஆற்றில் விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில், 9 பேர் உயிரிழந்தனர்.

மத்திய அரசின் புதிய **தொழிலாளர் சட்டங்**களை கண்டித்து, இன்று நடைபெற்ற பந்த் போராட்டம் காரணமாக, புதுச்சேரியில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டது.

------------------------------

*மோடி-நமீபியா 1 (10)*

5 நாடுகள் பயணத்தின் இறுதிக் கட்டமாக நமீபியா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, நமீபியத் தலைநகர் **விண்டோக்-**கில், அந்நாட்டு அதிபர் திருமதி **நெட்டும்போ நந்தின்டாய்த்வா-**வுடன், **பிரதிநிதிகள் நிலை**யில் பேச்சு வார்த்தை நடத்தினார். இருநாடுகளுக்கும் இடையே, பொருளாதாரக் கூட்டாண்மையை ஆழப்படுத்துவது குறித்தும், **முக்கியமான புதிய துறை**களில், **ஒத்துழைப்பு வாய்ப்பு**களை ஆராய்வது குறித்தும், இதில் விவாதிக்கப்பட்டது. மருத்துவம், மருந்தாக்கம், **எரிசக்திப் பாதுகாப்பு** உள்ளிட்ட துறைகளில், இருநாடுகளுக்கும் இடையே, பல்வேறு **புரிந்துணர்வு ஒப்பந்தங்**களும் கையெழுதாகின்றன. பிரதமரின் நமீபியப் பயணம் குறித்து, கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*மோடி-நமீபியா 2 (10)*

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் **நமீபியப் பயணம்**, அந்நாட்டு அதிபரின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளப் படுகிறது. இது, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முதலாவது **நமீபியப் பயணமா**கவும், அந்நாட்டிற்கான, இந்தியப் பிரதமர் ஒருவரின் 3ஆவது பயணமாகவும் அமைகிறது. பிரதமர் திரு. நரேந்திர மோடி நமீபியாவில், அந்நாட்டின் முதலாவது அதிபர் **டாக்டர் சாம் நுஜோமா-**விற்கு அஞ்சலி செலுத்த இருக்கிறார். நமீபியாவின் மிக உயரிய **சிவிலியன் விருது**, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்படுகிறது. இருதரப்பு உறவுகளின் மேம்பாட்டில் முக்கிய கட்டமாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நமீபிய நாடாளுமன்றத்தில் உரையாற்ற இருக்கிறார்.

-------------------------------

தன்கர் (9)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் நாளை புதுடெல்லியில், ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் முதலாவது, வருடாந்திர, கல்வியியல் மாநாட்டை தொடக்கி வைக்கிறார். மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன், **இந்திய ஞான முறைகளின் எதிர்காலம்** என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த 3 நாள் மாநாடு, இந்திய பாரம்பரிய ஞானத்தை, உலக அளவில் எடுத்துச் செல்வதாக அமையும் என்று, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ பண்டிட் தெரிவித்துள்ளார். 100 ஆய்வுக் கட்டுரைகள், 17 விவாத அமர்வுகள், மற்றும், வல்லுனர் உரைகள், இம்மாநாட்டில் இடம்பெறும்.

-------------------------------

துணைவேந்தர் மாநாடு (11)

மத்திய பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுக்கு இடையே, மத்திய கல்வி அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 2 நாள் மாநாடு, குஜராத் மாநிலம், **கேவாடியா**வில், நாளை தொடங்க உள்ளது. **தேசிய கல்விக் கொள்கை அமலாக்கத்**தின் 5ஆம் ஆண்டை ஒட்டி ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இம்மாநாட்டில், கல்விக் கொள்கையின் அமலாக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டு, மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு, கூட்டாக வடிவம் கொடுக்கப்படும். இந்திய உயர்கல்வித் துறையின் எதிர்காலத்தை தீர்மானிப்பதன் மூலம், **2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியா** என்னும் இலக்கை எட்டும் முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதில், **துணைவேந்தர்கள் மாநாட்டின் முடிவுகள்**, முக்கியப் பங்காற்றும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*பாலம்-விபத்து* (12)

குஜராத் மாநிலம் **வதோதரா** மாவட்டத்தில் இன்று அதிகாலை, **கம்பீரா பாலத்**தின் ஒருபகுதி திடீரென இடிந்து, 5 வாகனங்கள் **மகிசாகர்** ஆற்றில் விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில், 9 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர். விபத்து குறித்து தகவல் கிடைத்தவுடன், உள்ளூர் அதிகாரிகள், மற்றும் மாவட்ட நிர்வாகத்தினர், பெரிய அளவில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை தொடக்கினர். 3 தீயணைப்பு வண்டிகள், மற்றும், உள்ளூர் மக்களும், இப்பணிகளில் தங்களை இணைத்துக் கொண்டனர். ஆற்றுப் பாலம் இடிந்து விழுந்த விபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, **பிரதமரின் தேசிய நிவாரண நிதி**யில் இருந்து, தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கவும், காயமடைந்தவர்களுக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

-------------------------------

*விமான விபத்து* (8)

ராஜஸ்தான் மாநிலம் சுரு மாவட்டத்தில் இன்று, இந்திய விமானப் படைக்கு சொந்தமான ஜாகுவார் ரக போர் விமானம், தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. மாவட்ட நிர்வாகம், மற்றும், காவல் துறையினர், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்து எரிந்த நிலையில், 2 உடல்கள் மீட்கப் பட்டுள்ளதாக, மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார். சிவிலியன் உயிரிழப்பு எதுவும் ஏற்பட்டதாக தகவல இல்லை என்றும், அவர் கூறினார்.

-------------------------------

*விளையாட்டு – அமைச்சர்* (9)

நாட்டில் திறமை உள்ள விளையாட்டு வீரர்களை கண்டுபிடித்து, உலக தரமான பயிற்சி மூலம், திறமைகளை தொடர்ந்து வளர்ப்பதற்கு ஏற்ற சூழல் ஒன்றை, 2025ஆம் ஆண்டு **கேலோ பாரத் கொள்கை**யின் கீழ், அரசு உருவாக்கி வருவதாக, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி **ரக்க்ஷா கட்சே** கூறியுள்ளார். இன்று உத்தரபிரதேஷ் மாநிலம் **மோடி நகரி**ல் உள்ள, பளுதூக்கும் வீரர் பயிற்சிக் கழகத்தில், இளம் விளையாட்டு வீரர்கள், மற்றும், பயிற்சியாளர்களிடையே உரையாற்றிய அவர்,

திறமையான விளையாட்டு வீரர்களின் எல்லா கனவுகளையும் நிறைவேற்ற, அரசு உறுதி பூண்டுள்ளதாக கூறினார்.

------------------------------

*புதுச்சேரி பந்த் (14)*

மத்திய அரசின் புதிய **தொழிலாளர் சட்டங்**களை கண்டித்து, மத்திய தொழிற்சங்க அமைப்புகள், மற்றும், இண்டியா கூட்டணி சார்பில், இன்று நடைபெற்ற பந்த் போராட்டம் காரணமாக, புதுச்சேரியில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டது. பெரும்பாலான ஆட்டோ, டெம்போக்கள், மற்றும் தனியார் பேருந்துகள் ஓடவில்லை. அரசுப் பேருந்துகள், போலீஸ் பாதுகாப்புடன் இயக்கப்பட்டன. கடைகள், மற்றும், வர்த்தக நிறுவனங்கள் பெரும்பாலும் மூடப்பட்டு இருந்தன. ஒருசில தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டு இருந்தது. பந்த் போராட்டத்தின் போது, பல்வேறு இடங்களில் மறியலில் ஈடுபட்ட **இண்டியா கூட்டணி நிர்வாகி**கள் உட்பட, பலரை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப் பட்டவர்களில், முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி, மாநில காங்கிரஸ் தலைவர் திரு. வைத்திலிங்கம், மாநில திமுக அமைப்பாளர் திரு. ஆர். சிவா, சிபிஐ மாநில செயலர் திரு. சலீம் ஆகியோரும் அடங்குவர். பந்த் போராட்டத்தை ஒட்டி, புதுச்சேரி மாநிலம் முழுவதும், ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட போலீசார், பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

------------------------------

*ரங்கசாமி ஆலோசனை 1 (12)*

புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, துணை சபாநாயகர் திரு. ராஜவேலு, மற்றும். என்.ஆர். காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் சிலருடன் ஆலோசனை மேற்கொண்டார். ஆட்சி அதிகாரத்தில் இருந்தும், விரும்பியதை செய்ய முடியாத நிலை இருப்பதாகவும், சிறு பிரச்சனைகளில் கூட **ராஜ்நிவாஸ் தலையீடு** உள்ளதாகவும், முதலமைச்சர் இந்த சந்திப்பின் போது ஆதங்கம் வெளியிட்டதாக கூறப்படுகிறது. திரு. ஏ.கே.டி. ஆறுமுகம், திருமதி சந்திர பிரியங்கா, திரு. பாஸ்கர், திரு. ரமேஷ், திரு. லட்சுமிகாந்தன் ஆகியோர் இந்த ஆலோசனையில் கலந்து கொண்டனர். தொடர்ந்து இவர்கள், அமைச்சர் திரு. லட்சுமி நாராயணனை சந்தித்து பேசினர். பின்னர், அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினர்களும், சட்டப் பேரவையில் சபாநாயகர் திரு. ஆர். செல்வத்தை சந்தித்தனர். இதுகுறித்து சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்......

**(வாய்ஸ்-செல்வம்)**

*ரங்கசாமி-ஆலோசனை* 2 (4)

இதற்கிடையே, அடுத்தடுத்த இத்தகைய சந்திப்புகளால், புதுச்சேரி அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ள நிலையில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை சமாதானப்படுத்த, பிஜேபி மேலிடக் குழு, புதுச்சேரி வரவிருப்பதாகவும், தகவல் வெளியாகி உள்ளது.

--------------------------------

*புதுச்சேரி நேரு* (10)

புதுச்சேரியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என கூறியும், அதை கண்டித்து ராஜினாமா செய்வதாகக் கூறியும், சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர் திரு. நேரு, இன்று சட்டமன்றத்தில் தர்ணாவில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. புதுச்சேரியில் ஆதி திராவிடர இனத்தைச் சேர்ந்த அமைச்சரை, ராஜினாமா செய்ய வைத்தவர்கள், நியமன எம்.எல்.ஏக்கள் பதவிகளையும் பறித்துக் கொள்ள முயல்வதாக அவர் குற்றம் சாட்டினார். சட்டமன்றத்திற்கு அதிகாரம் இல்லாத நிலையில், அனைத்து எம்.எல்.ஏக்களும் ராஜினாமா செய்து, மாநில அந்தஸ்து கிடைக்கும் வரை அனைவரும் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என அவர் கூறினார்.

--------------------------------

*காரைக்கால் மாங்கனி* (15)

காரைக்காலில் புகழ்பெற்ற **மாங்கனி திருவிழா**வின் ஒருபகுதியாக, நேற்று நடைபெற்ற **மாப்பிள்ளை அழைப்பு** வைபவத்தை தொடர்ந்து, இன்று நடைபெற்ற, **பரமதத்தர்-புனிதவதியார் திருக்கல்யாண உற்சவத்தில்**, குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என். திருமுருகன், மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். காரைக்கால் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. நாஜிம், புதுச்சேரி காவல் துறை டிஐஜி திரு. சத்திய சுந்தரம், முதுநிலை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சௌஜன்யா, மற்றும், திருக்கோவில் நிர்வாக அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர். காரைக்கால் மாங்கனித் திருவிழாவின் முக்கிய பகுதியான **மாங்கனி இறைத்தல்** வைபவம் நாளை நடைபெற உள்ளது. மாங்கனி திருவிழாவை ஒட்டி நாளை, காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு நிறுவனங்கள், மற்றும், கல்வி நிறுவனங்களுக்கு, **உள்ளூர் விடுமுறை** அறிவிக்கப் பட்டுள்ளது. இதற்கு பதிலாக, வரும் 19ஆம் தேதி சனிக்கிழமை, காரைக்கால் பிராந்தியத்தில், வேலை நாளாக இருக்கும் என்றும், மாநில அரசின் உள்துறை அறிவித்துள்ளது.

--------------------------------

*வானிலை (10)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில், மணிக்கு 50 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் பலத்த தரைக்காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 11ஆம் தேதி வரை, ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, இயல்பை விட 2 முதல், 4 டிகிரி செல்சியஸ் அதிகமாக பதிவாகலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, **சென்னை புதுநகர மண்டலம்** உள்ளிட்ட இடங்களில் தலா 3செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------------

*கிரிக்கெட் (4)*

இந்தியா-இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான, 4ஆவது இருபது ஓவர் கிரிக்கெட் போட்டி, மான்செஸ்டரில், இன்று நடைபெறுகிறது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில், தற்போது இந்தியா, 2க்கு- 1 என்ற கணக்கில், முன்னிலையில் உள்ளது.

------------------------------

*தணிக்கை அறிக்கை (6)*

2023-24ஆம் ஆண்டிற்கான புதுச்சேரி அரசின் கணக்குப் பதிவேடுகளை ஆராய்ந்து, மத்திய அரசின் தலைமை **கணக்குத் தணிக்கை** அதிகாரி அலுவலகம் தயாரித்துள்ள அறிக்கை, சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப் படுவதற்காக இன்று, துணை நிலை ஆளுநருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக, தமிழ்நாடு-புதுச்சேரி பகுதிகளுக்கான முதன்மை **தலைமைக் கணக்கு அதிகாரி** திரு. ஆர். திருப்பதி வெங்கடசாமி, செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, நமீபியாவில், அந்நாட்டு அதிபருடன், **பிரதிநிதிகள் நிலை**யில் பேச்சு வார்த்தை நடத்தினார்.

**தேசிய கல்விக் கொள்கை** அமலாக்க நிலவரங்கள் **குறித்து,** மத்திய பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுக்கு இடையிலான, 2 நாள் மாநாடு, குஜராத் மாநிலம், **கேவாடியா**வில், நாளை தொடங்க உள்ளது.

குஜராத் மாநிலம் **வதோதரா** மாவட்டத்தில் இன்று, ஆற்றுப் பாலம் திடீரென இடிந்து, 5 வாகனங்கள் ஆற்றில் விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில், 9 பேர் உயிரிழந்தனர்.

மத்திய அரசின் புதிய **தொழிலாளர் சட்டங்**களை கண்டித்து, இன்று நடைபெற்ற பந்த் போராட்டம் காரணமாக, புதுச்சேரியில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**